இதழ்-78

01.12.2024

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்

**வடிவமைப்பாளர்**
ச. மதுஷா
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்துவை...

03 குழந்தைகளுக்கு வாழையிலையில் விருந்துண்ண கற்றுக் கொடுங்கள்
05 உலகின் பேரழகின் இரகசியம் தெரியுமா?
09 ஏழாவது ஆண்டாக திருச்செந்தூரில் ஒலிக்கும் ஈழத்தின் குரல்
10 மீண்டும் வரப்போகிறார் சக்திமான்
11 கிளிநொச்சி விதைப்பந்து திருவிழா
14 தேசியளவில் சாதிக்கும் யாழ் இந்துவின் மைந்தர்கள்
17 உடுவில் மகளீர் கல்லூரிக்கு வயது 200
26 எழுத்தாளர் இந்திரா சௌந்தரராஜனுக்கு இதய அஞ்சலிகள்
30 ஈழத்து மாணவன் கண்டுபிடித்த இல்த்திரனியல் வாக்களிப்பு
31 தேசியளவில் சாதிக்கும் வேம்படி மகளீர் கல்லூரி
33 என் கால்கள் வழியே...
38 பரத நாட்டியம்
40 இலங்கை கிரிக்கெட் அணியில் சாதிக்கும் தமிழ் வீரர்கள்



வாசகர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் திருநாள் நல் வாழ்த்துக்கள்

# குழந்தைகளுக்கு வாழையிலையில் விருந்துண்ண கற்றுக் கொடுங்கள்

## ஆசிரியர் பதிவு

தமிழ் பண்பாடு என்பது ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் வரலாற்றை தன்னுள் கொண்ட ஒரு மாபெரும் மரம். இந்த மரத்தின் வேர்கள் நம் முன்னோர்களின் வாழ்க்கை முறைகளிலும், பழக்கவழக்கங்களிலும் ஆழமாக பின்னிப்பிணைந்துள்ளன. ஆனால் இன்றைய நவீன உலகில், இந்த பாரம்பரிய மரம் பல கிளைகளை இழந்து வருவது வேதனை தருகிறது.

குறிப்பாக, இளைய தலைமுறையினருக்கு நம் பண்பாட்டின் சாராம்சத்தை உணர்த்துவதில் நாம் தவறிவிடுகிறோம். தமிழ் பண்பாட்டு விழாக்கள் என்பவை இதற்கான ஒரு சிறந்த வாய்ப்பு. ஆனால், இந்த விழாக்கள் வெறும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளாகவும் சமூக வலைத்தள காட்சிக்குரியதாகவும் மட்டுமே இருக்காமல், நம் பண்பாட்டின் மதிப்புகளையும், விழுமியங்களையும் எடுத்துரைக்கும் வகையில் அமைவதோடு எதிர்காலத்தினருக்கு உரிய வகையில் கடத்துமாறும் அமைதல் வேண்டும்.

எம்மவர் மத்தியில் இருந்த பல பண்பாட்டு விழுமியங்கள் இன்று வழக்கொழிந்து வருவது கவலைக்குரியது. நாகரீகத்தின் பேரில் பல முறைகளை இன்றைய தலைமுறை கைவிடும் அபாயம் காணப்படுகிறது. தரையில் பந்திப்பாய் விரித்து பத்மாசனத்தில் அமர்ந்து பந்தியில் உண்ணும் முறை என்பது வெறும் உணவுப் பழக்கம் மட்டுமல்ல. இது நம் முன்னோர்களின் சமூக உணர்வையும், பகிர்வின் தத்துவத்தையும் பிரதிபலிக்கிறது. பந்தியில் உண்ணும் போது, மக்கள் ஒன்றாக அமர்ந்து உணவு உட்கொள்வதால், அவர்களுக்குள் நல்லுறவு மேம்படுகிறது. மேலும், வாழை இலை என்பது நம் பண்பாட்டின் அடையாளங்களில் ஒன்று. வாழையிலையில் எப்படி உணவு பரிமாற வேண்டும் என்று சித்த மருத்துவத்திலேயே விரிவாக தரப்பட்டுள்ளதாம்.



வாழை இலையில் உண்ணும் போது, உணவு சுவையாக இருப்பதோடு மட்டுமல்லாமல், இயற்கையான வாசனை உணவுடன் கலந்து நம் உடலுக்கு நன்மை பயக்கும். ஆரோக்கியம் நிறைந்தது. நீரை தெளித்து வாழை இலையை கழுவி, அதன் மேல் நெய்யை தடவி, இலையில் சூடான உணவுகளை வைக்கும் போது, இலையில் சத்துக்களெல்லாம் குளோரோபில்லுடன் கரைந்து, உணவுடன் கலந்து விடுகின்றன. இதெல்லாம் சேர்ந்துதான் நமக்கும் ஆயுளை கூட்டுகிறது. சூடான சாப்பாட்டை வாழை இலையில் பரிமாறும்போது அந்த சூட்டில் இலை லேசாக வெந்து இலையின் பச்சையத்தில் உள்ள பாலிபீனால் சாப்பாட்டில் கலந்து விடும். இதன் மூலம் அதில் உள்ள விட்டமின் ஏ, சிட்ரிக் அமிலம், கால்சியம் மற்றும் கரோட்டின் ஆகியவை நமக்குக் கிடைக்கின்றன. வாழை இலையில் சாப்பிடுவதால், இளநரை வராமல் நீண்டநாட்கள் தலைமுடி கருப்பாக இருக்கும். மேலும், வாழை இலை உயிர்ப்பொருள் சிதைவுக்கு உட்படும் என்பதால், சுற்றுச்சூழலுக்கும் நன்மை பயக்கும்.

பாயாசம் என்பது நம் உணவுகளில் இன்றியமையாத ஒரு உணவு. வாழையிலையில் போடப்பட்ட உணவு உண்டு முடித்த பின்னர் பாயாசத்தை வாழை இலையில் போட்டு கைகளால் எடுத்து உண்ணும் வழக்கம் நம் முன்னோர்களின் பண்பாட்டின் ஒரு அங்கமாகும். ஆரோக்கியம் நிறைந்த இந்த முறையை இன்று விருந்துகளில் காண்பது அரிதாகி விட்டது. பிளாஸ்ரிக் கோப்பைகளில் பாயாசம் கரண்டியால் குடிப்பது நாகரீகமாகி சுற்றாடல் மாசடைவுகளுக்கும் காரணமாகிறது.

கொஞ்சம் யோசித்துப்பாருங்கள். இன்று ஆயிரம் பேருக்கு விருந்து வைக்கிறீர்கள் என்றால் எவ்வளவு பொலித்தீன் கடதாசி, பிளாஸ்டிக் குடிநீர் போத்தல், பிளாஸ்டிக் கோப்பைகள் என்பவற்றை இந்த சுற்றாடலுக்கு மாசாக்குகிறோம். இப்படி எத்தனை விருந்துகள் தினந்தோறும் நடக்கின்றன? சுற்றாடலுக்கு எந்த வித தீங்கும் விளைவிக்காத ஆரோக்கியமான விருந்தோம்பலை கொண்ட நாங்கள் ஏன் இந்த மாற்றத்தை ஏற்றுக் கொண்டோம் என்பது ஆச்சரியங்களின் உச்சம்!

வீடுகளில் சிறு நிகழ்வுகளிலாவது அல்லது பண்டிகைகளிலாவது எல்லோரையும் தரையில் இருத்தி வாழை இலையில் பாயாசம் வடையோடு உணவு பரிமாறுங்கள். மாதத்தில் ஒரு தடவையாவது உங்கள் பிள்ளைகள் எமது பாரம்பரிய முறையில் உணவு உண்ண வழிவகை செய்யுங்கள். ஆரோக்கியமும், உயர் விழுமியங்களும், சுற்றாடலுக்கு நன்மை தருவதுமான வாழையிலையில் உணவு உண்ணும் பழக்கத்தை அடுத்த தலைமுறைக்கு அறியச் செய்யுங்கள்.



# உலகின் பேரழகின் இரகசியம் தெரியுமா?

இரசனை என்னும் ஒரு புள்ளியில் எத்தனையோ இதயங்கள் சந்தித்துக் கொள்கின்றன. கணந்தோறும் அப்படியான சந்திப்புகள் எங்கோ ஏதோ ஒரு வடிவில் நிகழ்ந்தவண்ணந்தான் உள்ளன. இரசனையின் அந்த முதல்புள்ளி எங்கிருந்து தொடங்குகிறது என்று என்னைக் கேட்டால் அது வண்ணங்களில் தான் ஆரம்பிக்கிறது என்பேன்.

வண்ணங்கள் - இயற்கை மனிதர்களோடு பேசும் மொழி. இரவும் பகலும் மாறி மாறி இயற்கை அந்த வண்ணங்களோடு விளையாடி எமக்குப் பல வேடிக்கை காட்டுகிறது.

வண்ணங்களின் இராஜகிரீடம் வானவில். பூமியை தான்தான் ஆள்வதாய் இயற்கை கர்வம் கொள்ளும் போதெல்லாம் அந்த கிரீடத்தை எடுத்து அணிந்து கொள்கிறது.

சூரியன் ஒரு வண்ணகலாவித்தகன். அவன் வரைகிற ஓவியங்களே உலகனைத்திலும் பரவி நிறைந்துள்ளன. அவன் அவிழ்த்துவிட்ட வண்ணங்களே பூமியில் கூடிக்குலாவி குழந்தை பெற்று குடும்பம் வளர்த்து எண்ணிலடங்கா வண்ணங்களாய் பெருகி நிற்கின்றன.

வண்ணங்கள் ஒளியின் பிள்ளைகள் தான். எல்லா வண்ணங்களிற்கும் ஒளி தேவைதான். ஆனால் சில ஒளிகளிற்கு சில நேரங்களில் வண்ணங்கள் தேவைப்படுகின்றன.

எங்கெனில் இவ்விதழின் முன்னழகைப் பாருங்கள். ஓவியங்கள் நிறைந்த ஒளிவளர் விளக்குகளை காணுங்கள். வண்ணங்களாலான ஓவியத்திற்கு ஒளி தேவையா? அல்லது ஒளிக்கு ஓவியம் தேவையா என்று நின்று யோசிக்க வைக்கிறது அந்தக் காட்சி.

வண்ணங்கள் இல்லாத உலகை கற்பனை செய்து பாருங்கள். வேண்டாம்! நிறுத்துங்கள். வண்ணங்களலற்ற உலகை நீங்கள் கற்பனையில் கூட காண வேண்டாம். கற்பனையின் பேரழகே வண்ணங்களால் தான் நிறைந்துள்ளது. வண்ணங்களற்ற உலகம் இங்கு யாருக்கும் வாய்க்க வேண்டாம்.

வெண்ணிலவையே “வண்ணங் கொண்ட வெண்ணிலவாய் வேண்டும்” என்று கேட்ட பேராசைக் காரர்கள் நாம். வண்ணங்கள் அற்ற வாழ்க்கை யாருக்கும் அமையவேண்டாம்.


“வண்ணங்கள் வண்ணங்கள் அற்ற
வழியில் வழியில் சிலர்
நடக்கிறார்.....
நடக்கிறார்....
மஞ்சளும் பச்சையும் கொண்டு
பெய்து பெய்து மழை
நனைகிறார்..
நனைகிறார்..”

எல்லோர் வாழ்விலும் பெய்ய வேண்டும் அப்படியொரு வண்ணமழை.

இதில் முக்கியமானது என்னவெனில் வண்ணங்களின் இன்பத்தை அனுபவிக்க எந்தப் பட்டப்படிப்பும் தேவையில்லை. வண்ணம் சர்வதேச மொழி மட்டுமல்ல. சர்வ உடைமை மொழி.

மயிலைப்பாருங்கள். அது தோகை விரித்து ஆடும் வண்ணக்கூத்தைப் பாருங்கள். இதை விட எதை பேசுவதற்கு மயிலிற்கு மொழி வேண்டும்? அவை பேச வேண்டியதன் அவசியம் தான் என்ன? மொழியாலும் பேச முடியாத பரவசங்களை அவை தம் தோகையால் காட்டுகின்றனவே.

பறக்கும் பட்டாம்பூச்சி ஒரு மலரில் வந்தமரும் காட்சியை கண்டிருக்கிறீர்களா? வாழ்நாளின் இறுதி நாளிலாவது அதைக்



கண்டுவிட்டுத்தான் நீங்கள் சாக வேண்டும். பூவோடு சங்கமிக்கும் வண்ணத்துப்பூச்சியின் வண்ணச் சங்கமம்- பூச்சிக்கும் பூவுக்கும் சிற்றின்பம்- கண்பவர்களிற்குத்தான் பேரின்பம்.

கருப்பையில் பிறந்து வரும் ஒவ்வொரு குழந்தையும் பூமியின் வண்ணக்கோலங்களை கண்டு நுகரவே கண்கொண்டு வருகின்றது. கண்ணற்று வந்து பிறந்துவிட்ட மழலைகளின் வண்ணங்கள் குறித்த கற்பனைகள் பற்றி எண்ணிப்பார்க்கவும் எம்மால் இயலாது. எம்மால் வண்ணங்களை பார்க்கமுடிந்தது. இரசிக்கமுடிந்தது. அந்த வண்ணங்களில் நனைந்து தோய்ந்தே வளர்ந்து வரமுடிந்தது. படைத்தவனிற்கும் காப்பவனிற்கும் நன்றி சொல்ல எமக்கு இந்த ஒரு காரணம் போதாதா?

சில நேரங்களில் வாழ்வு எங்கோ ஒரு இடத்தில் திசை மாறும் போதுதான் அது சாயம் போன வண்ணமாய் வாழ்வை வறளச் செய்கிறது. சாயம் போன அந்த வாழ்விலும் சாரமாய் எஞ்சியிருப்பது வண்ணமயமான சில ஈர நினைவுகள் தானே.

சாயம் போன ஓர் ஆணின் வாழ்க்கைக்கு வண்ணமூட்டுகிறாள் ஒரு பெண். பெண்ணின் வாழ்வில் ஊறிப்போன சில வண்ணங்களை திருத்தியமைக்கிறான் ஓர் ஆண். வண்ணங்களால் வாழ்வு அழகாகிறது.

ஆடி ஓடி உழைத்துக்களைத்த மனிதனை தன் மாயவித்தைகளை காட்டி -தன்னழகை அனுபவிக்க வைத்து -இயற்கை மனிதனை ஆட்சி செய்யும் மாதம் மார்கழிமாதம். இந்தமாதந்தோறும் வண்ணங்களின் கொண்ணாட்ட குதூகலங்கள் எல்லோர் வீடுகளிலும் ஏதோ ஒரு வடிவத்தில் நிறைந்திருக்கும். வாசல் நிரப்பும் மார்கழிக் கோலங்களாகவோ, மரமாய் ஒளிவீசும் கிறித்தவ கோலாகலங்களாகவோ எப்படியோ இந்த வண்ணக்குவியல்கள் வீடுகளை நிரப்பியிருக்கும் காலம் இது. வண்ணங்கள் வீடுகளில் நிறையும் போது மனங்களின் எண்ணங்களும் மகிழ்வில் நிறைகின்றன. வண்ணங்களின் அதீத ஆற்றல் அதுவே. அவை மனிதனிற்கு எல்லாவகையிலும் மகிழ்ச்சியை மட்டுமே தரவல்லன.

இந்த வண்ணங்களிற்கு எத்தனையோ விதமாய் வரைவிலக்கணம் கொடுக்க மனிதன் முயன்று பார்த்தான். சில வண்ணங்கள் எதிர்மறை எண்ணங்கள் என்றும் கூட சொல்லிப்பார்த்தான். கறுப்பு வண்ணம் துயரத்தின்



குறியீடு என்றான். அந்தக் காக்கைச் சிறகினிலே நந்தலாலன் கரியமுகம் காணும் வரைஇ குத்திக் கொல்லும் பார்வையிலே கொன்று தீர்க்கும் அவள் கருவிழிகள் காணும் வரைஇ வான் பார்த்த உழவன் கறுத்து நின்ற மேகக்கூட்டம் கண்டு களித்த வரைஇ கறுப்பை துயரமென்றே நம்பினான் மனிதன். வண்ணங்களை தன் வலைக்குள் சிக்கவைக்க மனிதப்பிறவியால் முடியுமா என்ன?

சிவப்பு நிறம்! அபாயம் என்றான். வீதியில் விரைந்து போகிறவனை நில் என்று சொல்ல சிவப்பை வைத்தான். ஓர் இடத்தில் "நில்" என்று சொன்ன சிவப்பு இன்னோர் இடத்தில் "வா" என்று சொன்னது. மனிதன் சிவப்பிடமும் தோற்றுவிட்டான்.

போடாதீர்கள். உங்கள் இச்சையில் போடுங்கள்.

ஓவியத்திற்கு வண்ணம் தீட்டுவது போல் உலகிற்கு உங்கள் வண்ணங்களை தீட்டாதீர்கள். ஓவியங்கள் பேசாமல் உங்கள் வண்ணங்களை ஏற்றுக் கொள்ளும். உலகம் அப்படியல்ல.

மனிதர்களிடத்திலும் இயற்கை யிடத்திலும் உள்ள வர்ணங்களை அதன் இயல்போடே இரசியுங்கள்.. அவை காட்டுகிற விசித்திரக்கோலங்களை கொண்டாடி நுகருங்கள். வண்ணங்களில் குழையுங்கள். திளையுங்கள்.. வாழ்வை வண்ணமயமாய் ஆக்கிக் கொள்ளுங்கள்..

இனி நிறங்களில் குறை சொல்வானா மனிதன். நிறங்களில் கறையில்லை. கறை கண்டு குறை சொல்ல மனிதன் முயன்ற கதைதான் ஏராளம்.

கொச்சையான வார்த்தைகளையும் பச்சையாய்ச்சொல்வான். பாவமேதுமறியா பசும்புல்லின் தளிர் நிறம் பச்சைக்கு ஏன் இந்தப் பழி! அக்கரைக்கு இக்கரை பச்சை. இச்சை கொண்ட மனிதனிற்கு எக்கரையும் பச்சைதான். பழியை பச்சையில்



# ஏழாவது ஆண்டாக திருச்செந்தூரில் ஒலிக்கும் ஈழத்தின் குரல்



சூரன் போர் நடந்ததாக சொல்லப்படுகின்ற இந்தியா திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் கந்த சஷ்டி நோன்புப் பெருவிழா உலகப் பிரபலம் வாய்ந்தது. உலகெங்கும் இருந்து முருகப் பெருமான் அடியவர்கள்



திருச்செந்தூர் வந்து கடலலை போன்ற கூட்டமாக பெருந்திரளாக வழிபாடு செய்வார்கள்.

அத்தகைய மகிமை பொருந்திய ஆலயத்தில் தொடர்ச்சியாக ஏழாவது தடவையாக இலங்கையை சேர்ந்த செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு திருமுருகன் அவர்கள் 2024ஆம் ஆண்டு கந்தசஷ்டி திருவிழாவின் கலையரங்க சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தினமும் சிறப்புரை ஆற்றி இருந்தார். இதன் காணொளிகளை துமியின் லழர வரடிந மற்றும் முகநூல் தளங்களில் பார்க்கலாம்.



# மீண்டும் வரப்போகிறார் சக்திமான்



90's முனைளகளின் மனங்கவர்ந்த தொடரான சக்திமான் சினிமாவா வரப்போவதாக கூறப்படுகிறது. சக்திமான் தொடரில் சக்திமானாக நடித்த முகேஷ் கண்ணாவே திரைப்படத்திலும் நடிக்கிறார்.

“இந்த சட்டையும் நானும் பிரிக்கமுடியாதவங்க. எனக்குன்னே தோன்றிய உழளவரஅந இது. அந்த சக்திமான் கேரக்டரும் எனக்குள்ள எனக்காகவே உதித்த கேரக்டர். அதை நடிக்கறப்போ நான் கேமராவையே மறந்துருவேன்“ என்று சினிமா அறிவிப்புல சொல்லீருக்கார் முகேஷ் கண்ணா.

1997ல இருந்து 2005 வரைக்கும் இத்தொடர் வந்தது. மதியம் எல்லா குழந்தைகளும் வுஎ முன்னாடி வந்து இந்த தொடரை பார்ப்பார்கள். ஜக்காள், பவர் , இருள் நீடிக்கிறது, “கங்காதர் வித்யாதர் மாயாதார் ஓம்கார்ணர் சாஸ்திரி“ போன்ற வார்த்தைகள் எல்லாம் நெஞ்சில் நிலைத்தவை..!

சில விரும்பத்தகாத நிகழ்வுகள் நடந்தபிறகு முகேஷ் டீவில தோன்றி நாங்க எப்படி இதை எடுக்கறோம் நான் எப்படி பம்பரம் போல சுத்தறேன்னு கிராபிக்ஸ் நடப்பதை காட்டினார். எதுவும் உண்மயில்லைன்னும் குழந்தைகளுக்கு சொன்னார்.

சக்திமானை ஒரு சீரான சூப்பர் ஹீரோவா பலர் அந்தக்காலத்தில் ஏற்றுக் கொண்டார்கள். அவரது உடை கடைகளில் தேடித்தேடி வாங்கும் அளவிற்கு பிரபல்யமானது. இப்ப 2027ல சினிமாவாக வரப்போவதாக சொல்லியுள்ளார் அதே முகேஷ் கண்ணா. பெரும் விருந்தொன்றிற்கு தயாராகுங்கள்.



# கிளிநொச்சி விதைப்பந்து திருவிழா 2024



மேற்படி நிகழ்வு அண்மையில் மிகவும் பிரமாண்டமாகவும் சிறப்பாகவும் ஓராயம் அமையத்தின் அனுசரணையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், வனபரிபாலன அதிகாரிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

முதலில் பாடசாலையில் மாணவர்கள் தாங்கள் வீட்டில் தயாரித்து வைத்து, கொண்டு வந்திருந்த விதைப்பந்துகளுடன் பாடசாலையில் அணிவகுத்து நின்றிருந்தார்கள். உண்மையில் இந்த அணிவகுப்பு அவர்களை ஒரு போர் வீரர்கள் போல் காட்டியது. உண்மையில் காலநிலை





மாற்றத்திற்கு எதிராக போர்புரியும் வீரர்கள் அவர்கள் என்பதை உணர்த்திநின்றது. காடுகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். தாவரங்களை, விலங்குகளை



எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்? எவ்வாறு வார்த்தைகளுக்கு கட்டுப்பட வேண்டும்? தொலைந்து போகாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? என்ற பல அறிவுரைகள் மாணவர்களுக்கு கூறப்பட்டது. காடு படித்தல் சம்பந்தமாகவும் உரையாடப்பட்டது.



மழையும் இலேசாக தூறிக் கொண்டிருந்தது.

பின்னர், எல்லோரும் வாகனத்தில், முன்னே, வனபரிபாலனத் திணைக்களத்தினரின் வாகனம் வழிகாட்ட அக்கராயன் பிரதேசத்திற்குட்பட்ட காட்டுப் பகுதிக்கு சென்று, அங்கு நான்கு குழுவாகப் பிரித்து, வெவ்வேறு திக்குகளில் முன்னேறி விதைப்பந்தகளை வீசினார்கள். மழையும் பெய்யத் தொடங்கியது. கவனத்தில் எடுக்காமல் வீசிக் கொண்டிருந்தார்கள். சுமார் 12000 க்கு மேற்பட்ட பல்வேறு விதைகளைக் கொண்ட விதைப்பந்துகளை வீசினார்கள்.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் மிகப் பெரும்பாலான மாணவர்கள் கிளி-விவேகானந்த வித்தியாலத்தில் இருந்து பங்குபற்றியிருந்தாலும், இராமநாதவுரம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி மகாவித்தியாலம், திருவையாறு மகாவித்தியாலயம் போன்றவற்றிலிருந்து மாணவர்களும், கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து பிரதி அதிபரும் கலந்துகொண்டதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.





# வினோத யுத்தத்தில் ஈடுபட்டு வரும் வட கொரியாவும் தென் கொரியாவும்

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே நீண்டகாலமாக காலமாகவே மோதல் போக்கு நிலவி வரும் நிலையில் தென்கொரியாவைக் குறிவைத்து வடகொரியா மிக வினோதமான தாக்குதல்களை முன்னெடுத்து வருகிறது.

தென் கொரியா எல்லையில் அமானுஷ்யமான, வினோதமான ஒலிகளை வடகொரியா ஒலிபரப்பி வருகிறது. கார் விபத்துகள் ஏற்படுவது போன்ற சத்தம், பேய் அலறுவது, உலோகங்கள் மோதும் சத்தம் என்று தொடர்ச்சியாக வினோதமான சத்தங்களை ஸ்பீக்கரில் போட்டு வடகொரியா ஒலிபரப்புகிறது.

இது தென்கொரியக் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைக்கும் வகையில் இருப்பதாகப் புகார்கள் எழுந்துள்ளன. இது கிராமவாசிகளுக்கு உளவியல் ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்துகிறது. தூக்கமின்மை, தலைவலி மற்றும் மன அழுத்தத்தை ஏற்படுத்துவதாக அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

முன்னதாக வடகொரியாவில் இருந்து தப்பி வந்தவர்கள் குறித்த விவரங்கள் அடங்கிய நோட்டீஸ்களை தென்கொரியா வீசியது. அதற்குப் பதிலடியாக வடகொரியா குப்பைகள் நிரப்பப்பட்ட பலன்களை தென்கொரியா மீது அனுப்பி வெடிக்கச் செய்தது. இதற்குப் பதிலடியாக தென் கொரியா எல்லையில் ஸ்பீக்கர் வைத்துப் பாடல்களை ஒலி பரப்ப தொடங்கியது. அதன் பின்னரே வட கொரியாவும் இதுபோல ஸ்வீக்கர் வைத்தது. ஆனால், உளவியல் ரீதியாகத் தாக்க மோசமான சத்தங்களை ஒலிபரப்பி வருவது குறிப்பிடத்தக்கது.



# தேசியளவில் சாதிக்கும் யாழ் இந்துவின் மைந்தர்கள்

கடந்த மாதம் தேசிய ரீதியில் விளையாட்டு மற்றும் கலை நிகழ்வுகளில் யாழ் இந்துக் கல்லூரி பல சாதனைகளை படைத்துள்ளது.



உதைபந்தாட்டத்தில் இரண்டாமிடம் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியது யாழ் இந்து அணி. இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சங்கத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட 14 வயதிற்குட்பட்ட மாவட்ட ரீதியான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் எமது பாடசாலை அணி இரண்டாமிடத்தினை பெற்றுக்கொண்டு தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது. இதில் 20 அணிகள் பங்கேற்றிருந்தன. தொடர் நாயகனாக மு. அக்சயன் தெரிவு செய்யப்பட்டார். 26 வருடங்களுக்கு பின்னர் உதைபந்தாட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட உயர்ந்த பெற்பேறு இதுவாகும்.



இலங்கை பாடசாலை கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட போட்டியில் 15 வயதிற்குட்பட்டனு பிரிவு போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி அணி இரண்டாமிடத்தினை பெற்றுக் கொண்டது. இப்போட்டிகள் மட்டக்களப்பில் இடம்பெற்றன.



அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டி 2024 தேசிய மட்ட தனி இசை பிரிவு 2 இல் கோகுலன் சாகித்தியன் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டார்.



யாழ் இந்துக் கல்லூரியின் சிரேஸ்ட ஆங்கில கவிதை நாடகம் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தினை பெற்றுள்ளது. முதல் தடவையாக வடமாகாண பாடசாலையொன்று தேசிய மட்ட ஆங்கில நாடக போட்டியில் முதலாமிடத்தினை பெற்றுள்ளது.



அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டி - 2024 இலும் நாட்டார் பாடல் பாடிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்கள் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்றார்கள்.



அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டி 2024 யில் தனி வாத்தியம் பிரிவில் வயலின் - கௌ.அரோசன் மற்றும் மிருதங்கம் - ர.லயசர்மா ஆகியோர் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்றனர்.



2024 அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டியில் இசை நாடகப் பாடல் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூ ரி மாணவர்கள் அரிச்சந்திரா மயான காண்டம் நடித்து தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்றனர்.


# ஈழத்தின் கலாநிதி ஆறு. திருமுருகன் தஞ்சையில் ராஜ ராஜ சோழனின் சதயப் பெருவிழாவில் சிறப்புரை

தஞ்சை பெரிய கோவிலை கட்டிய மாமன்னன் ராஜராஜ சோழன் பிறந்த நாள் மற்றும் முடி சூட்டிய நாள், ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தன்று சதய விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் 1,039-வது சதய விழா இரண்டு நாட்கள் அரசு விழாவாக கொண்டாடப்பட்டது. முதல் நாள் மங்கள இசையுடன் விழா தொடங்கியது. தொடர்ந்து கருத்தரங்கம், பரதநாட்டியம், கவியரங்கம் உள்பட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இரண்டாம் நாள் காலை தேவாரம், திருவாசகம் அடங்கிய திருமுறை நூலுக்கு ஓதுவார்கள் சிறப்பு பூஜைகள் செய்து, யானை மீது வைத்து ராஜவீதிகளில் ஊர்வலமாக எடுத்து வந்தனர்.

பின்னர் பெருவுடையார்- பெரியநாயகி அம்மனுக்கு 39 வகையான அபிஷேகம் நடந்தது. தொடர்ந்து பெருவுடையார்- பெரிய நாயகி அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. இதில் தருமபுர ஆதீனம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், முதுபெரும் ஓதுவார் திருத்தணிகை சுவாமிநாதன் ,போராசிரியர் குமாரவயலூர் பாலச்சந்தர் உட்பட 300 ஓதுவார்கள் உள்பட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். மேலும் சிறப்பு அழைப்பில் கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களும் கலந்து கொண்டு மன்னனின் சிறப்புப்பற்றியும் ,திருமுறைகளைக்காத்த சிறப்புப் பற்றியும் சிறப்புரை ஆற்றினார்கள்.









# யாழில் உடுவில் மகளிர் கல்லூரிக்கு வயது 200!

## -பெண் விடுதலையின் ஓர் மைற்கல்-




ஐ.வி.மகாசேனன்

இன்று ஆட்சி அதிகாரத்தில் பெண்கள் முதன்மைப்படுவதையும் முதன்மைப்பட வேண்டும் என்ற வாதங்களையும் உலகம் ஏற்றுள்ளது. அதற்கான சான்றுகளையும் அவதானிக்க கூடியதாக உள்ளது. எனினும் ஒரு காலத்தில் பெண்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்ட காலங்களும் இருந்தது. ஒருவகையில் பொத்தி பாதுகாக்கப்பட்டனர் என்ற வாதமும் உண்டு. மறுதளத்தில் சுதந்திரங்கள் முடக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டார்கள் என்ற வாதங்களும் காணப்படுகிறது. எனினும் சமகாலம் நிலைமைகள் மாறி விட்டது. வரலாற்றை புதுப்பிக்க முடியவில்லை. எனினும் உலகாளும் அமெரிக்க அதிகாரத்தை கைப்பற்ற மூன்று பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள் என்பதே முன்னேற்றமே ஆகும். எனினும் பெண்களை ஆட்சியதிகாரத்தில் அமர்த்துவதில் உலகிற்கு முன்னுதாரணம் இலங்கைத்தீவு என்பதில் இலங்கையர்களுக்கு என்றும் பெருமையே ஆகும். உலகின் முதல் பெண் பிரதமராக ஸ்ரீமாவோ-உம், உலகின் முதல் பெண் ஜனாதிபதியாக சந்திரிக்கா-உம் வரலாறு பதிவு செய்கின்றது.

இத்தகைய வரலாறுகளை இலங்கையின் கல்வி நிலை வளர்ச்சியே உறுதி செய்தது எனலாம். அத்தகையதொரு வரலாற்று பதிவிலேயே 2024ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 200வது ஆண்டை நிறைவு

செய்கின்றது. இது வெறுமனவே கல்வி நிறுவனம் ஒன்றின் வரலாற்றை மாத்திரம் பதிவு செய்யவில்லை. ஓர் சமுக மாற்றத்தையே குறித்து நிற்கின்றது.

புதுமைப்பெண்கள் என்ற கவிதை தலைப்பில் முண்டாசு கவிஞர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் வரிகளில்,

‘சாத்திரங்கள் பலபல கற்பாராம்
சவுரியங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவுளர்க்கினி தாகச் சமைப்பராம்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டீரோ!”

எனக்குறிப்பிடுவார். பழமைகள் தகர்த்தது புதுவிதி எழுதிட கல்வி எனும் ஆயுதம் கூரானது. அக்கூரிய ஆயுதம் ஒன்றின் பயணம் 200 ஆண்டை தொட்டுள்ளது பெருமைக்குரிய பதிவாகும்.

பெண்கள் வீட்டுக்குள் முடக்கப்படுவது, குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்திலோ அல்லது குறிப்பிட்ட ஒரு சமூகத்திலோ சுருக்கப்படவில்லை. முழு உலகிற்கும் பொதுவானதொரு இயல்பாகவே ஒரு காலத்தில் காணப்பட்டது. எனினும் நிலைமைகள் இன்று பல நிலைகளில் மாறிவிட்டது. அம்மாற்றத்திற்கான விதைகளில் ஒன்றே 1824ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் உடுவிலில் அமெரிக்க மிசனரியை சேர்ந்த ஹரியற் வின்சிலோ அம்மையாரால் ‘உடுவில் மகளிர் கல்லூரியாக’ பெயரிடப்பட்டது. இது தற்போது யாழ்ப்பாணக் கல்லூரியாக அடையாளப்படுத்தப்படும் அன்றைய மட்டக்கோட்டை செமினரிக்கு எதிர் பாகமாக நிறுவப்பட்டதாகவும் விபரிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் இப் பாடசாலை ‘பெண்கள் மத்திய கல்லூரி’ என்றே அழைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் குறிப்பாக வடக்கு புலத்தில் மிசனரிகளின் உள்ளகப் போட்டியிலும், இந்து-கிறிஸ்தவ வெளியக போட்டியிலும் கல்விக்கூடங்களை உருவாக்கிய



காலமாகும். இவ்வரிசையின் முன்னணியில் இலங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள உடுவில் என்ற சிறிய கிராமத்தின் ஒரு பகுதியாக உடுவில் மகளிர் கல்லூரி உள்ளது. ஹரியற் வின்சிலோ அதன் முன்னோடி முதல்வர். அக்காலப்பகுதி பெண் கல்வி ஊக்குவிக்கப்படாத காலமாக அமைந்திருந்தது. குமரி ஜெயவர்த்தனவின் 'மூன்றாம் உலக நாடுகளில் பெண்ணியவாதம் மற்றும் தேசியவாதம்' (Feminism and Nationalism in Third World) என்ற நூலில் பிரித்தானிய் குடியேற்ற நாட்டுச் செயலாளர் சேர் ஜேம்ஸ் எமர்சன் டென்னன்ட் (Tennent) கூற்றுப்படி, 'மாணவர்கள் முதலில் குறைந்த சாதி மற்றும் ஏழைகளே இணைந்தார்கள். ஆனால் பள்ளி பின்னர் மாவட்டத்தில் சொத்து மற்றும் செல்வாக்கின் பெற்றோரின் மகள்களை ஈர்த்தது.' ஆரம்பத்தில் ஏழைகளிடம் ஈர்க்கப்பட்டது என்பதை கடந்து வலிந்து இணைக்கப்பட்டார்கள் என்பதுவே நிதர்சனமான பார்வையாகும்.

1841 வாக்கில், பிரிட்டிஷ் சர்ச் மிஷனரி சமுகம் நல்லூரில் (யாழ்ப்பாணம்) பெண்கள் உறைவிடப் பள்ளிக்கூடத்தை தொடங்கியது. மேலும் மாணவர்களுக்காக பிரச்சாரம் செய்ய வேண்டிய அவசியமில்லை. பள்ளியில் சேர விண்ணப்பித்த ஏராளமானவர்கள் இருந்தனர். இவற்றுக்கான அடிப்படையை உடுவில் மகளிர் கல்லூரியும் அதன் நிறுவுனர் ஹரியற் வின்சிலோ அம்மையாருமே வழிகோலினார்கள் என்பது மறுக்க முடியாத நிதர்சனமாகும்.

அமெரிக்கன்மிஷனைச் சேர்ந்த வண. உவின்சிலோ அவர்களும் அவரது மனைவி திருமதி. ஹரியற் வின்சிலோ இணைந்து உடுவில் பெண் விடுதிப் பாடசாலையின் ஆரம்ப கர்த்தாக்களாகத் திகழ்கின்றனர். 1820இல் உடுவிலில் பணியாற்றுவதற்கு வருகைதந்த இவர்கள் ஒல்லாந்தரது தேவாலயத்திற்கு அருகில் இருந்த வீட்டில் குடியமர்ந்து அவ்வீட்டு விறாந்தையிலே நாளாந்தப் பாடசாலையை நடாத்தி வந்தனர். அந்நாட்களில் ஹரியற் அம்மையாரிடம் இரு பெண்கள் நாள் தோறும் கற்றுவந்ததாகவும், ஒருநாள் அவர்கள் வீடு செல்லவேண்டிய நேரத்தில் புயல் வீசியதனால் வீடுசெல்லாது அங்கேயே தங்கிவிட்டனர். அவ்வேளை அப்பிள்ளைகளிலொன்று ஹரியற் அம்மையார் கொடுத்த உணவை வாங்கி உண்டது. அதை அறிந்த அப்பிள்ளையின்




தந்தை, "சாப்பாட்டினைச் சாப்பிட்டு சாதிக் கட்டுப்பாட்டை அழித்தபடியால், அவர்களை ஏற்றுத் தனது வீட்டில் வசிக்க இடமளிக்க முடியாதெனவும், அவளுக்கு விவாகம் செய்து கொடுக்க முடியாது எனவும் கூறி அவர்களையே அப்பிள்ளையை வைத்துக்கொள்ளுமாறு' கூறி விட்டுச் சென்றார். அப்பிள்ளையை ஏற்றுக்கொண்ட ஹரியற் அம்மையார், கல்வி போதித்ததுடன் வேறும் சில பெண்பிள்ளைகளை இணைத்து கற்பிக்கத் தொடங்கினார். இச்சம்பவமே உடுவில் பெண் விடுதிப் பாடசாலையின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்திருந்தது.

உடுவிலில் பெண்விடுதிப் பாடசாலை ஆரம்பமானதைத் தொடர்ந்து சுதேச பாடசாலையிலிருந்து வந்த 27 பெண்கள் இதன் முதல்வகுப்பில் சேர்க்கப்பட்டனர். 5 தொடக்கம் 11 வயது வரையுள்ள பெண்கள் அடங்கிய அப்பாடசாலையை ஹரியற் அம்மையார் சிறப்பாக நடாத்திவந்தார். 1828ஆம் ஆண்டு 50 பிள்ளைகளும் 1837ஆம் ஆண்டு 200 பிள்ளைகளும் கல்வி பயின்றதாக இவர் தனது குறிப்பில் குறிப்பிடுகின்றார். அம்மாணவியரின் உணவு, உடை, படிப்பிற்கான செலவு ஆகியவற்றை அமெரிக்கன் மிஷனரியே ஏற்றுக்கொண்டது. அதேவேளை அவர்களுக்கு உதவும் வகையில் அமெரிக்காவிலிருந்த கொடை வள்ளல்கள் ஒவ்வொரு பிள்ளைக்கும் வருடா வருடம் 20 டொலர்களை அனுப்பிவந்தனர். இச்சலுகைகளைப் பெற்றுவந்த பெண் பிள்ளைகளுக்கு கிறிஸ்தவப் பெயர்கள் சூட்டப்பட்டு அவர்கள் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டனர்.

இம்மாணவியர்கள் திருமண வயதை அடைந்த பின் அவர்களுக்கு திருமணம் நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கான சீதனம் சீர்வரிசைகள் என்பன மிஷனரிகளாலேயே வழங்கப்பட்டது. ஒவ்வொரு பெண் பிள்ளைகளுக்குமான சீதனப்பணமாக 100 இறைகால் (75ருபா) முதல் முப்பது . ஆண்டுகளாக வழங்கப்பட்டு வந்தது. இன்றும் உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் பெண்களுக்கு மிஷனரியினர் உதவி கிடைத்து வருவது குறிப்பிடத்தக்கது. எனினும் இந்து மத்தியதர வர்க்க மாணவர்களும் கல்வி கற்கும் நிலைமைகள் காணபடுகிறது.

உடுவில் மகளிர் பாடசாலை மூலம் கல்விப்பணியை முன்னெடுத்துவந்த மிஷனரியினர் அதற்குக் கிடைத்த வரவேற்பின் காரணத்தால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் விடுதிப்பாடசாலைகளை நிறுவும்



பணியை முன்னெடுக்கத் தொடங்கினர். அவ்வகையில் யாழ்ப்பாணத்தின் வரணி, உடுப்பிட்டி எனப் பல பாகங்களில் பெண்கள் பாடசாலைகள் நிறுவப்பட்டது.

அமெரிக்கன் சிலோன் மிஷ னினால் பரிபாலிக்கப்பட்ட பல பாடசாலைகள் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனத்துடன் தொடர்புபட்ட பாடசாலைகளாக மாற்றம் பெற்றன. தற்போது யாழ்ப்பாணக் கல்லூ ரியும், உடுவில் மகளிர் கல்லூரியும் தனித்தனியான ஆளுநர் சபைகளைக் கொண்டிருக்கின்றன. இந்த ஆளுநர் சபைகளிலே தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனத்தினைச் சேர்ந்தோர் பெரும்பான்மையான உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஆனால், இந்தக் கல்லூ ரிகளை நிருவகிப்பதற்கான நிதி அமெரிக்காவின் பொஸ்டன் நகரிலே இருக்கின்ற அமெரிக்கன் சிலோன் மிஷனின் தாய் நிறுவனத்தினால் தொடர்ந்தும் வழங்கப்படுகிறது.




**ஆசியாவின் மிகப்பழைய, விடுதி வசதிகளோடு கூடிய பள்ளிக்கூடமாக உடுவில் மகளிர் கல்லூரி காணப்படுகிறது. பெண்களைக் கற்பிப்பது தொடர்பாக சமூகத்தில் இருந்த எதிர்ப்புகளின் மத்தியிலும் அங்கு கற்கும் பெண்களின் தொகை மெதுமெதுவாக உறுதியாக அதிகரித்தது. ஹரியற் தனிப்பட்ட பல இழப்புக்களால் துன்பப்பட்டார். யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த காலத்தில் ஐந்து பிள்ளைகள் தொற்று நோயால் இறந்தார்கள். ஆண்மகன் கடல் பயணத்தில் இறந்து போனார். முடிவில் தனது 33ஆவதுவயதில் இளவயதில் ஹரியற் இறந்து போனார். அவரோடு சேர்ந்து பணிபுரிய இலங்கை வந்த அவரது சகோதரிகளும் அவரின் மரணத்தின் பின்னர் இறந்து போனார்கள். தன்னலமற்ற ஆளுமைகளின் உயர் ஈடுபாட்டிலேயே உடுவில் மகளிர் கல்லூரியின் உருவாக்கமும் பாரிய சமூக மாற்றமும் உருவாகியது.**

உடுவில் மகளிர் கல்லூரியின் 200 ஆண்டுகால வரலாற்றில் 10 அதிபர்கள் பணி புரிந்திருக்கிறார்கள். ஹாரியட் வின்ஸ்லோவுக்குப் பிறகு எலிசா அக்னியூ அதிபராகப் பொறுப்பேற்றார். அதைத் தொடர்ந்து சூசன் ஹவ்லாண்ட் மற்றும் உடுவில்லின் கடைசி அமெரிக்க அதிபராக லுலு புக்வால்டர் ஆகியோர் பதவி ஏற்றனர். மிகுந்த



பெருமையுடனும் நம்பிக்கையுடனும் மிஸ் புக்வால்டர், உடுவிலின் முதலாவது இலங்கையைச் சேர்ந்த அதிபரான மிஸ் ஆரியம் ஹட்சன் பரமசாமிக்கு பள்ளியின் தலைமைப் பொறுப்பை வழங்கினார். இவரைத் தொடர்ந்து 1970இல் திருமதி. சரஸ்வதி சோமசுந்தரமும் 1982இல் செல்வி செல்லையாவும் பதவியேற்றனர். அவரைத் தொடர்ந்து செர்ரி மில்ஸ், சுனீதா பற்றீசியா ஜெபரட்ணம் ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றி உள்ளனர். இவர்கள் அனைவரும் கல்லூரியின் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்புவதில் தங்களுடைய அழியாத அடையாளங்களை விட்டுச் சென்றிருக்கிறார்கள். இவர்களின் தொடர்ச்சியாகவே உடுவிலின் தற்போதைய அதிபராக திருமதி. ரோஷனா குலேந்திரன் காணப்படுகிறார்.

தற்போது பாடசாலையில் சுமார் 1330 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். பள்ளியில் முதன்மை, இடைநிலை மற்றும் மேலதிக கல்வித் திட்டம் என மூன்று குறிப்பிட்ட பிரிவுகள் உள்ளன. இடைநிலைப் பிரிவு மாணவர்களைத் தமிழ் மற்றும் ஆங்கில வழித் தேர்வுகளுக்குத் தயார்படுத்துகிறது. மேலதிக கல்வித் திட்டம் (FEP) திறன் மேம்பாட்டின் மூலம் மாணவர்களை வலுப்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. மேலதிகக் கல்வித் திட்டம் கணக்கியல் தேர்வுகளுக்கான (AAT) வகுப்புகளை நடத்துகிறது மற்றும் இசை, ஆங்கிலம் மற்றும் கணினி வகுப்புகளையும் நடத்துகிறது. வலைப்பந்து, கூடைப்பந்து மற்றும் ஹொக்கி ஆகியவை உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்கும் விளையாட்டுகளாகும். நாடகமும் அரங்கியலும் உடுவில் பெண்கள் கல்லூரியின் மற்றுமொரு சிறப்பாக அமைகிறது. உடுவில் ஷேக்ஸ்பியரின் நாடகம் மற்றும் பாடசாலையினால் எழுதப்பட்டு தயாரிக்கப்பட்ட ஏனைய நாடகங்களின் தயாரிப்புகளுக்காக மாகாண மட்டத்தில் தொடர்ந்து பரிசுகளை வென்றுள்ளது.



தமிழ் சமுகப்பரப்பில் பெண்களுக்கு முதன்மையான நிலை காணப்படுகின்றது. மண்ணை, மலையை, நீரை பெண்களாய் பார்க்கும் மரபு உண்டு. இதன் பின்னணியில் பெண்களிடம் ஒருங்குசேர்ந்த அன்பும் கருணையுமே முதன்மையானதாகும். இப்பின்னணியில் தமிழர் மரபை பாதுகாக்கும் நோக்கில் அன்பு கொண்ட மாணவர்களை வெளியில் அனுப்புவதற்கு பாடசாலை தொடர்ந்து முனைகிறது. உலகில் இப்பொழுது நேர்மையும் விசுவாசமும் எல்லா நிலைகளிலும் அருகிக்கொண்டுவரும் இத்தருணத்தில் "உண்மை உன்னை விடுதலை செய்யும்" என்ற பாடசாலையின் இலட்சிய வாசகமானது மகத்தான முக்கியத்துவத்தோடு அங்கே எதிரொலிக்கிறது.

## பொய்க்கால் நடன நிகழ்வில் தேசிய மட்டத்தில் விக்ரோறியாக்கு முதலிடம்!



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட பொய்க்கால் நடன நிகழ்வும் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தினை பெற்றுள்ளது.

இந்த நடன நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும், இவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்றுவித்த அனைவருக்கும் வாழ்த்துகள்.

## தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற மானிப்பாய் மகளீர் கல்லூரி மாணவி

அகில இலங்கை பரத நாட்டிய தேசிய மட்டப் போட்டி கடந்த 09.11.2024 திருகோணமலையில் நடைபெற்றது. இப்போட்டியில் வலிகாம வலய பாடசாலையான யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி செல்வி.ஓஜஷா சிறிரங்கன் தேசியரீதியில் முதலாமிடத்தை பெற்று சாதனை படைத்துள்ளார். சாதனை படைத்த மாணவிக்கும் பயிற்றுவித்த ஆசிரியர் குழுவுக்கும் எமது பாராட்டுக்கள்.



# அபயம் இரகசியம் பேணும்

## இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

# 071 07 12345

**மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு**



(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)



தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

**24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்

# நியூசிலாந்து நாடாளுமன்றத்தை அதிரவைத்த இளம் பெண் எம்.பி.


நியூசிலாந்தில் மவோரி பழங்குடி மக்களுக்கு எதிரான சட்ட திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த இனத்தைச் சேர்ந்த எம்பியான ஹானா ரவ்ஹிடி ஆக்ரோஷமாக பழங்குடியின பாடலை பாடியதோடு சட்ட திருத்த மசோதாவை கிழித்து எறிந்தார். தற்போது இந்த வீடியோ உலகம் முழுவதும் பகிரப்பட்டு வருகிறது.

21 வயதான ஹானா ரவ்ஹிடி மைபி க்ளார்க் நியூசிலாந்தின் மிக இளம் வயது எம்பி என்ற பெருமையை பெற்றவர்.

நியூசிலாந்து நாட்டில் மவோரி பழங்குடியின மக்களுக்கும் பிரிட்டன் அரசுக்கும் இடையே 1840 இல் வைதாங்கி என்ற ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதில் மாவோரி பழங்குடி மக்களுக்கு சலுகைகள் உரிமைகள் வழங்க வகை செய்யப்பட்டிருந்தது, இந்நிலையில் ஒப்பந்தத்தில் மாற்றம் செய்ய நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கு டி பாடி மாவோரி கட்சி எம்பியான ஹானா ரவ்ஹிடி மைபி க்ளார்க் கடும் எதிர்ப்பு தெரிவித்து தங்களது போர் பாடலை ஆக்ரோசத்துடன் பாடி மசோதா நகலை கிழித்து எறிந்தார். தொடர்ந்து அவருடன் மற்ற எம்பிக்களும் சேர்ந்து கொண்டு தங்களது போர் பாடலை பாடினர்.










# எழுத்தாளர் இந்திரா சௌந்தரராஜனுக்கு இதய அஞ்சலிகள்

பிரபல எழுத்தாளரும், ஆன்மீக சொற்பொழிவாளருமான இந்திரா சௌந்தரராஜன் (வயது 66) மதுரையில் உள்ள அவரது இல்லத்தில் (10-11-24) அன்று காலமானார்.


இந்திரா சௌந்தர்ராஜன் 1958ஆம் ஆண்டு சேலம் நகரில் நவம்பர் 13ஆம் தேதி பிறந்தவர். முழுநேர எழுத்தாளராக ஆவதற்கு முன், டி.வி.எஸ் குழுமத்தில் பணிசெய்தார், இந்திரா சவுந்தர்ராஜன். இவரது இயற்பெயர் பி.சவுந்தர்ராஜன். எழுதியது தான் இந்திரா சவுந்தர்ராஜன் என்னும் பெயரில் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது முக்கியமான கதைகள் பலவும் மறுபிறவி, இயற்கைக்கு அப்பாற்பட்ட கதைகள், தெய்வீக சஞ்சலத்தால் உண்டாகும் ஃபேண்டஸி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.


காஞ்சிபுரம் சங்கர மடாதிபதி ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் பற்றிய அனுபவங்களை 'காஞ்சியின் கருணை' என்ற நிகழ்ச்சியில் 300 எபிசோடுக்கு மேல் செய்தார், இந்திரா சௌந்தர்ராஜன். இவரது பெயரை நாம் அடிக்கடி பார்க்கும் பக்கெட் அளவு நாவல்களில் பார்க்கலாம்.

குறிப்பாக, கோட்டைபுரத்து வீடு, என் பெயர் ரங்கநாயகி, சித்தி,சிவமயம், ருத்ரவீணை, மர்மதேசம் ஆகிய தொடர்களில் கதை மற்றும் வசனத்தில், இந்திரா சௌந்தர்ராஜனின் பங்கு முக்கிய இடம்பெற்றிருந்தது.

மேலும், சிருங்காரம், ஆனந்தபுரத்து வீடு, இருட்டு, கட்டில் ஆகியப் படங்களில் எழுத்துப் பணி செய்தார், இந்திரா சௌந்தர்ராஜன். அதிலும், சிருங்காரம், ஆனந்தபுரத்து வீடு படத்துக்கு திரைக்கதையையும் அமைத்தார். இவரது நாவல்களில் எங்கே என் கண்ணன், காற்றோடு ஒரு யுத்தம், திக் திக் திக் ஆகியவை புகழ்பெற்றவையாகும்.

மேலும் ரகசியம், விடாது கருப்பு, மாயவேட்டை, மந்திர வாசல், கிருஷ்ண தாசி, யாமிருக்க பயமேன், அது மட்டும் ரகசியம், அத்தி பூக்கள், ருத்ரம், புகுந்த வீடு, நாகம்மா, சிவ ரகசியம், ஜீ தமிழ், கங்கா சுப்பிரமணியபுரம் ஆகியத் தொலைக்காட்சித் தொடர்களிலும் எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுத்துப் பணி செய்திருக்கிறார்.




கல்லுக்குள் புகுந்த உயிர், நீலக்கல் மோதிரம், சோமஜாலம், நந்தி ரகசியம், மாயவிழிகள், நாகபஞ்சமி, சிவஜெயம், கோட்டைப்புரத்துவீடு, தோண்டத் தோண்டத் தங்கம், அஞ்சு வழி மூணு வாசல், உஷ், மகாதேவ ரகசியம், வைரபொம்மை, ஜீவா என் ஜீவா, விடாது கருப்பு, ருத்ரவீணை பகுதி1, 2, 3,4 ஆயிரம் அரிவாள் கோட்டை, அதுமட்டும் ரகசியம், மாயவானம், அப்பாவின் ஆத்மா போன்ற பல நாவல்களை எழுதியுள்ளார். இவரது நாவல்கள் காலம் உள்ளவரை இவர் பெயர் கூறி நிற்கும். ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

# சதுரங்கத்தில் சாதிக்கும் ஈழத்துச் சிறுமி தாய்லாந்து பயணம்




சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 2 இல் கல்வி பயிலும் ***கிஷ்ணாராம் மானஷா,*** தாய்லாந்தில் நடைபெறவுள்ள 2024 ம் ஆண்டுக்கான ஆசிய பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்க சுற்றுத் தொடருக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த தொடர் எதிர்வரும் டிசம்பர் 1 ம் திகதி தொடக்கம் 11 ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முன்னதாக இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கம் நடத்திய தனிநபருக்கான 7வயதுப் பெண்கள் பிரிவிலே வலய மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட போட்டிகளில் 6/6 சுற்றுக்களையும் வெற்றி பெற்றார்.

அத்துடன் தேசிய ரீதியில் 4 ம் இடத்தை பெற்றுக் கொண்டார். மேலும் இந்த வருடம் களுத்துறையில் நடைபெற்ற இளையோருக்கான பொதுநலவாய தொடரில் சுயினை மற்றும் டீடவைண போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தார்.

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை



இந்துவின் இசை அன்னை என்பதற்கு அடையாளமாக இருந்தவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முதல் பெண் ஆசிரியர். விழாக்கள் யாவற்றையும் ஒழுங்குபடுத்தி கல்லூரியில் இருந்த காலம் வரை நிறைகுடம் முதலான வரவேற்புகளை நிறைவேற்றியவர். செல்லாத்தா, செல்லாச்சி என்று மாணவர்கள் வைத்த பெயர்களுக்கு எற்ப ஆத்தாவாகவும், ஆச்சியாகவும் இருந்து ஒழுக்கத்தோடு மாணவர்களை நெறிப்படுத்தியவர் செல்வி செல்லத்துரை ரீச்சர். பெரும்பாலும் இவர் தந்தைக்கும் படிப்பித்திருப்பார். தனயனுக்கும் படிப்பித்திருப்பார். தலைமுறைகள் தாண்டிய ஆசிரியப் பாரம்பரியம் கொண்ட பெருந்தகையின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்

# ஆத்ம சாந்தி பிரார்த்தனை

அளவெட்டிக் கிராமத்தில் பௌராணிகர் (புராண படன ) மரபைக் காத்து நின்றதோடு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான புராணப்படிப்பிலும்,பன்னிரு திருமுறை முற்றோதலிலும் தொடந்து பங்குபற்றிய பெருந்தகை திரு .உருத்திரபசுபதி ஐயாவின் பிரிவு குறித்து மிகுந்த கவலையடைகிறோம். கும்பழாவளை விநாயகப் பெருமான் ஆலயத்தில் கந்தபுராணத்துக்கு எந்தவித குறிப்பும் பாராது பொருள் உரைக்கும் அவரது ஆற்றல் கண்டு மக்கள் வியந்து போற்றுவர்.



12.11.2024 அன்று இறைவன் திருவடிகளில் சரணடைந்த அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

# நடிகர் டெல்லி கணேஷ் அவர்களுக்கு இதய அஞ்சலிகள்



பிரபல தென்னிந்திய நடிகர் டெல்லி கணேஷ் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 80. குணச்சித்திரம், வில்லன், நகைச்சுவை என பல்வேறு வேடங்களில் நடித்து ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தவர் டெல்லி கணேஷ். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி என சுமார் 400 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். மர்ம தேசம், பொறந்த வீடா புகுந்த வீடா, பல்லாங்குழி, செல்லமே உட்பட பல சின்னத்திரை தொடர்களிலும் நடித்துள்ளார். சில பிறமொழி நடிகர்களுக்குப் பின்னணி குரலும் கொடுத்துள்ளார். அன்னார் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

# ஈழத்து மாணவன் கண்டுபிடித்த இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம்



இலத்திரனியல் வாக்களிக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்து வவுனியா விபுலானந்தா கல்லூரியில் தரம் 9 இல் கல்வி பயிலும் சி.கபிலாஸ் என்ற மாணவன் சாதனை படைத்துள்ளார்.

அகில இலங்கை ரீதியில் நடைபெறும் ரொபோட்டிக் தொடர்பான புத்தாக்கப் போட்டியினை முன்னிட்டு வவுனியா விபுலானந்தா கல்லூரியில் தரம் 9 இல் கல்வி பயிலும் 14 வயதுடைய சி.கபிலாஸ் என்ற மாணவன் இலத்திரனியல் முறையில் வாக்களிக்கும் இயந்திரம் ஒன்றை கண்டு பிடித்துள்ளார்.

குறித்த இயந்திரத்தில் வாக்காளர்கள் தமது கடவுச் சொல்லை (வாக்கு சீட்டு இலக்கம்) செலுத்தி தமது கைவிரல் அடையாளத்தை பதிவு செய்து விரும்பிய கட்சிக்கு வாக்களிக்க கூடியதாக அது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், மொத்த வாக்குளை அறியும் வசதியும் காணப்படுகின்றது. போலியான முறையில் மீண்டும் ஒருவர் வாக்குகளை அளிக்க முயன்றால் அதனை அந்த இயந்திரம் நிராகரித்து குறித்த நபரை வெளிப்படுத்தும் வகையில் தொழில் நுட்பத்தை பயனபடுத்தி இவ் இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# தேசியளவில் சாதிக்கும் வேம்படி மகளீர் கல்லூரி மாணவிகள்



கல்வியில் மட்டுமல்ல இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தேசிய ரீதியில் சாதனை படைக்கும் யாழ்.வேம்படி அகில இலங்கை பரத நாட்டிய போட்டி மற்றும் கர்நாடக சங்கீதப் போட்டி 2024 இல், யா.்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை மாணவிகள் 5 போட்டிகளில் பங்குபற்றி தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர். தனி நடனம் (சிரேஷ்ட பிரிவு -1), தனி நடனம் (சிரேஷ்ட பிரிவு -2), குழு நடனம் (சிரேஷ்ட பிரிவு ), நம்நாட்டுப் பாடல், திரை இசைப்பாடல் ஆகிய பிரிவுகளிலேயே முதலிடம் பெற்றார்கள்.



அகில இலங்கை பரதநாட்டிய போட்டி - 2024 தனி நடனம் (சிரேஷ்ட பிரிவு -1) இல் 1ம் இடம் செல்வி. அபிநயா றஜீபன் அகில இலங்கை பரதநாட்டிய போட்டி - 2024 தனி நடனம் (சிரேஷ்டபிரிவு- 2) இல் செல்வி. ஆரபி செல்வக்குமரன் 1ம் இடம் பெற்றார்.



அகில இலங்கை பரதநாட்டிய போட்டி - 2024 சிரேஷ்ட பிரிவு (குழு) முதலாம் இடம் பெற்றது. செல்வி.சதுர்த்திகா விமலநாதன், செல்வி.விஷாலி தயாளன், செல்வி.ஹர்சிகா சசீகரன், செல்வி.கௌஷிகா குணபாலன், செல்வி.சைந்தவி நக்கீரன், செல்வி. பிரணவிகா உதயராசா, செல்வி.ஆரபி செல்வக்குமரன், செல்வி.ஆரணியா ராஜ்குமார், செல்வி.ரித்திகா சிவரூபன், செல்வி.சங்கீர்த்தனா நாகநாதமுதலி, செல்வி.விபூசிகா நந்ததேவன், செல்வி.வித்தகி தயானந்தராஜன் ஆகிய மாணவிகளே இப்போட்டியில் குழுவாக வென்றனர்.



அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டி - 2024 நம்நாட்டுப் பாடல் போட்டியில் 1ம் இடம் பெற்றனர். செல்வி. கலைவாணி சசிகரன், செல்வி. சாயகி பிரதீபன், செல்வி. சிறிகலா விஜயநேசன், செல்வி. இலக்கியா கருணாநிதி, செல்வி. மீனாஷி ரேகா இரஞ்சிஷ்குமார், செல்வி. சாகித்யா சிவகுமார், செல்வி. வரேண்யா ஸ்ரீரங்கநாதன், செல்வி. விதுஷாளினி விஜியகாந் ஆகிய மாணவிகள் இப்பிரிவில் சாதித்தனர்.

அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டி - 2024 திரை இசைப்பாடல் போட்டியில் 1ம் இடம் பெற்றனர். செல்வி. ஆவர்த்தனா றஞ்சித்குமார், செல்வி. மனஸ்வினி சிவகாந்தன், செல்வி. ஜாதவி நிறஞ்ன், செல்வி. ஆரபி சிவபாதமூர்த்தி, செல்வி. தேஜஸ்வினி லிங்கேஸ்வரன், செல்வி. மாதுரி மாதவன், செல்வி. ஷெரினா ஏஞ்சலின் மரியசெல்வம், செல்வி. கிருபாஷினி நெல்சன் ஆகிய மாணவர்கள் இப்பிரிவில் சாதித்தனர்.



வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

ஐ.வி.மகாசேனன்



# 11 என் கால்கள் வழியே...

## மதம் ஒன்று கொண்டாட்டங்களில் வேறுபாடு!

இந்தியாவிற்கான பயணத்தில் அதிகம், எனது பண்பாடு மற்றும் கலாச்சாரங்களுடன் இணைந்த ஒரு தேசத்திற்குள் பயணப்படுகின்றேன் என்ற எண்ணங்களுக்குள்ளேயே பயணம் ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பாக வட இந்தியா சார்ந்த ஹிந்தி மொழி மாத்திரமே எனக்குள் முரண்படக்கூடியதாக எண்ணியிருந்தேன். எனினும் எண்ணங்களும் நடைமுறைகளும் முரண்படுவதை ஆரம்பம்



முதலேயே உணரக்கூடியதாக இருந்தது. குறிப்பாக உணவு மற்றும் இந்து மதக் கடவுள்களில் வேறுபாட்டை முன்னைய பதிவுகளில் குறிப்பிட்டிருந்தேன். இப்பதிவு மதங்களில் கடவுள்களின் தொடர்ச்சியாக பண்டிகைகள் விரதங்களின் வேறுபாட்டை விபரிக்கிறது.

இந்தியா பல நாடுகளின் சேர்க்கை என்பதை இந்தியாவை பழகுகையிலேயே உணர்ந்து கொண்டேன். முன்னர் ஒருமுறை பேஸ்புக் செய்தியில பார்த்த ஞாபகம், 'இந்தியாவின் மாநிலங்கள் ஒவ்வொன்றின் சனத்தொகையும் வேறு நாடுகளின் சனத்தொகைக்கு நிகராக அமைகின்றது.' எடுத்துக்காட்டாக தமிழ்நாட்டு சனத்தொகை ஜேர்மன் நாட்டின் சனத்தொகைக்கு நிகராக அமைகின்றது. இந்தியாவின் மிகவும் சிறியதொரு நிர்வாக மாநிலமாகவே

டெல்லி காணப்படுகின்றது. டெல்லி ஒன்றிய பிரதேசத்தின் சனத்தொகையும் இங்கிலாந்து நாட்டு சனத்தொகையும் சமமாக காணப்படுகின்றது. இவ்வாறே அனைத்து மாநிலங்களும் மற்றும் ஒன்றிய பிரதேசங்களும் காணப்படுகின்றது.

பல நாடுகளின் சேர்க்கை மாதிரியை கொண்டுள்ள இந்தியா, மொழி ரீதியாக மாத்திரமன்றி பண்பாட்டு ரீதியாகவும் பல மாறுதல்களையும் வேறுபாடுகளையும் கொண்டுள்ளது. மொழியிலும் வட இந்தியாவை 'Hindi Belt' என ஹிந்தி மொழி பேசும் மாநிலங்களாக சுருக்கி விட முடியாது. ஒவ்வொரு மாநிலமும், மாநிலத்துக்குள் சில பிரதேசங்களும் வேறுபட்ட பேச்சு மொழிகளை கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக மத்திய பிரதேசத்தில் ப்ராஜ், மலேய், அகிதி, பஹிலி, புந்தேலி, சதிஷ்கடி என்பனவும் உத்தர பிரதேசத்தில் ப்ராஜ், போஜ்பூரி என்பனவும் சில எடுத்துக்காட்டுகளாகும். இவற்றில் பெரும்பாலனவற்றுக்கு எழுத்து வடிவம் காணப்படுவதில்லை. ஒரு சில முதியவர்கள் பிரதேச மொழி மாத்திரமே அறிந்தவர்களாயும் உள்ளார்கள்.

அவ்வாறானதாகவே அமைகின்றது. வேறுபட்ட மத நம்பிக்கைகள் வழிபாடுகளை ஒன்று சேர்த்து இந்து என்ற அடையாளத்துக்குள் சுருக்கி உள்ளார்கள். இந்த வேறுபாடு வடக்கு-தெற்குக்குள் மாத்திரம் பிரதிபலிப்பதில்லை. வடக்கினுள்ளேயே முரணான விடயங்கள் பின்பற்றப்படுகின்றது. குறிப்பாக வட இந்தியா ஸ்ரீராமரை பூசிக்கின்றது தெய்வீக நிலையில் உயர்வாக கொண்டாடுகின்றது. அதே வட இந்தியாவில் இராவணனும் பூசிக்கப்படுகின்றான் தெய்வீக நிலையில் கொண்டாடப்படுகின்றான்.

வட இந்தியாவில், (பின்னர் அறிந்து கொண்டேன் தென்னிந்தியாவிலும் சில இடங்களில்) தசரா எனும் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. நாங்களும் தசார கொண்டாடுகிறோம். வேறு பெயர். வேறுபட்ட நோக்கம். ஆம். நவராத்திரியின் பத்தாம் நாள் தசரா என அழைக்கப்படுகின்றது. நாம் சூரன்போர் என்ற பெயரில் அம்மன் மகிசா சூரனை வதம் செய்வார். எங்க ஊரில, இணுவிலில், அது இன்னும் சிறப்பு. ஊர் முழுக்க சேர்ந்து பக்தியாகவும் திருவிழாவாகவும் கொண்டாடி தீர்ப்போம். நவராத்திரியின் இறுதி

இந்தியாவை ஆண்டவர்களும், ஆள்பவர்களும் அகண்ட இந்திய உபகண்டத்தை ஆள்வதற்காக வேறுபட்ட விடயங்களை ஒன்றாக்கி பொதுப் பெயரிட்டு உள்ளார்கள். ஹிந்தி மொழியும் இந்து மதமும்



நாள் சூரன் போரில் இணுவில் சிவகாமி அம்மன் கோயிலில் மகிசா சூரவதம் இடம்பெறும். வடக்கு வீதியில் அம்மனின் சிங்க வாகனத்தின் வாய்க்குள் சூரனின் குடல். சிங்கத்தின் காலுக்குள் சூரனின் தலை துடிக்கும். சூரனின் வயிறு கிழிக்கப்பட்டு சிவலிங்கம் காட்சி தரும். எனினும் சூரன் மரணிக்கவில்லை. நெல்லி மரத்தில் மறைந்து கொண்டார் என்பது நம்பிக்கை. மறுநாள் சூரவதத்திற்கு சிவகாமி அம்மன் கிழக்கு இணுவிலில் இருந்து மேற்கு இணுவிலில் உள்ள கந்தசுவாமி ஆலயத்திற்கு செல்வார். வாழைவெட்டு என்று அழைப்போம். வாழை மரம் நெல்லி மரமாக கற்பனை பண்ணி வெட்டப்படும். மாலையில் கிராமத்தை சுற்ற ஆரம்பிக்கும் ஊர்வலம் நடுச்சாமத்திலேயே முடிவுறும். கந்தசாமி கோவிலில் வாழை வெட்டு இடம்பெற்று, சிறிது நேரம் அம்மன் அங்கு குளிராத்தி, மீள அம்மன் கோயிலுக்கு வருவது நடுச்சாமம் ஆகும். இளையோர்கள் முகமூடி அணிந்தும் முகமூடி அணியாதும் ஆடிப்பாடி மகிழ்வது, அது ஊரின் பெருந்திருவிழா.

சரி. நாங்கள் டெல்லிக்கு திரும்புவோம். டெல்லியில் நவராத்திரி இறுதி நாளாக தசாரா கொண்டாடப்படுகின்றது.



இங்கும் சூர வதம் தான். இங்கு சூரனாக இராவணனும், வதம் செய்யும் நிலையில் இராமனும் காணப்படுகின்றார்கள். தசரா இங்கு பெருந்திருவிழா. வெடிகள் கொழுத்தி பெரும் ஆரவாரம். 2023இல் தசரா கொண்டாட்டம் பற்றிய அறிமுகம் கிடைக்கையில் பெரும் ஆச்சரியம், 'நவராத்திரிக்கும் இராமருக்கும் இடையில் என்ன தொடர்பு' என்று. நவராத்திரியில் ஒன்பது நாட்களும் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதிக்கு விரதம் இருக்கின்றோம். இங்கு இராமர் எப்படி வந்தார்? வட இந்தியாவில் பண்டிகைகள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் இராமர் முதன்மைப்படுத்துவது இயல்பானதாகும். அதாவது நவராத்திரி இறுதி நாளிலேயே இராவணனை இராமன் வதம் செய்ததாக நம்பப்படுகின்றது. அதனையே வட இந்தியாவில் தசராவாக கொண்டாடுகிறார்கள்.

தீபாவளி கொண்டாட்டமும் வட இந்தியாவில் வேறுபட்ட நோக்கங்களையே போதிக்கின்றது. தீபாவளி கொண்டாட்டத்திலும் இராமரே முதன்மைப்படுகின்றார். நவீன தமிழ்த் தேசியத்தில் தீபாவளி எமது பண்டிகையா? இல்லையா? என்பதே பெரும் வாதமாக காணப்படுகின்றது. அதாவது எமது நம்பிக்கையில் கிருஷ்ணர் நரகாசுரனை வதம் செய்து உலக மக்களை காத்த நாள் தீபாவளி எனக் கொண்டாடப்படுகின்றது. நவீன தமிழ்த் தேசியத்தில் ஆரிய முரண்பாடுடன் கடவுள்கள்

எல்லாரையும் ஆரியர்களாகவும் சூரர்களை தமிழ் மூத்த குடிகளாகவும் விவரிக்கும் புதிய மரபு காணப்படுகின்றது. இவ்புதிய மரபுக்குள் தீபாவளி சார்ந்த சச்சரவும் காணப்படுகின்றது. வடஇந்தியாவில் தீபாவளிக்கு புது கதையே சொல்லப்படுகின்றது. இராமர் சீதையை இராவணனிடமிருந்து மீட்டு 14 வருட வனவாசத்திற்கு பின்னர் அயோத்தி திரும்பிய நாளாக நம்பப்படுகின்றது. இராமரை வரவேற்க தீபங்களேற்றி கொண்டாடப்படுகின்றது. தசராவில் இராவணனை வதம் செய்து ஒரு மாத கால இடைவெளியில் அயோத்தி திரும்பியதாக நம்பப்படுகிறது.

இராமர்-இராவணன் பூசிப்பு இந்தியாவின் பன்மைத்துவ சிறப்பு ஆகும். இந்தியா முழுவதும் உள்ள பக்தர்கள் தசராவில் தீமைக்கு எதிரான நன்மையின் வெற்றியை இராவணனின் உருவ பொம்மைகளை எரித்து நினைவுகூரும் வகையில் கொண்டாடி தீர்ப்பார்கள். எனினும் வடஇந்தியாவிலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் இராவணனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயில்களில் மக்கள் கூடி அவரிடம் பிரார்த்தனை செய்கிறார்கள். இந்த இடங்களில், ராவணன் ஒரு சிறந்த அறிஞராகப் பார்க்கப்படுகிறார். மேலும் இந்த குறிப்பிடத்தக்க நாளில் அவருக்கு மரியாதை செலுத்தப்படுகிறது. இராவணன் பிறந்த நிலமாகவும், ஆட்சி செய்த நிலமாகவும், மனைவி மண்டோதரியின் நிலமாகவும், இராவணனுக்கும் மண்டோதரிக்கும் திருமணம் நடைபெற்ற நிலமாகவும் வட இந்தியாவில் உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், மகராஷ்டிரா, ராஜஸ்தான் என பல மாநிலங்களிலும் இராவணனுக்கு ஆலயமும் பூசிப்பும் இடம்பெறுகின்றது. இதுவே இந்தியாவின் பன்மைத்துவத்தின் அழகு. இராமரையும் கொண்டாடுகிறது. இராவணனையும் கொண்டாடுகிறது. என் நண்பன் சந்தோசன் ஒரு சந்தர்ப்பத்தில எங்களுக்கு கூறியது தான் ஞாபகம் வருகிறது. ‘கொண்டாட்டம் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு. அதில் காரணங்கள் தேவையில்லை. கொண்டாடி மகிழ்வோம்.’

இந்தியாவின் பன்மைத்துவத்தில் ஒற்றுமையை இவ்வாறே பேணுகிறது. அர்த்தங்களுக்குள் மூழ்கவில்லை. அவரவர் நம்பிக்கைகளை அவரவர் வரையறைக்குள் அனுமதிக்கிறது. இலங்கை மக்கள் கனிசமாக முன்னேற வேண்டியுள்ளது. இந்திய மக்களிடம் கற்க வேண்டியும் உள்ளது.



# இந்த ஆண்டில் இதுவரை 274 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றிய சவுதிஅரேபியா



இந்த ஆண்டில் (2024 இல்) இதுவரை மொத்தமாக 274 பேருக்கு சவுதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அதில் 101 பேர் வெளிநாட்டவர்கள் ஆவர். இது கடந்த 2023 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளை விட இது மூன்று மடங்கு அதிகம் என்று கூறப்படுகிறது.

வேலைவாய்ப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து மத்திய கிழக்கில் செல்வச்செழிப்பான நாடாக விளங்கும் சவூதி அரேபியாவில் பலர் தங்கியுள்ளனர். பாகிஸ்தானைச் சேர்ந்த 21 பேர், ஏமன் - 20 பேர். சிரியா -14 பேர். நைஜீரியா- 10. எகிப்து-9 பேர் ஜோர் டான்-8 பேர். எத்தி யோப்பியா - 7 பேர், சூடான், இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து தலா 3 பேர், இலங்கை, எரித்திரியா மற்றும் பிலிப்பைன்ஸில் இருந்து தலா ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக வழக்குகள் இந்த ஆண்டு மரண தண்டனையின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு போதைப் பொருள் வழக்குகளில் 92 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது, அதில் 69 பேர் வெளிநாட் டவர்கள். வருடத்தில் இந்த அளவிலான எண்ணிக்கையில் வெளி நாட்டவர்களுக்கு சவுதி அரேபியா மரண தண்டனை நிறைவேற்றுவது இதுவே முதல் முறை.



# பரதநாட்டியம்

செல்வி S. லாவண்யா
11A

தமிழ் நாட்டின் நாகரிகக் கருவூலச் சின்னமாய் அருங்கலைகளின் தத்துவ வடிவமாக எழுச்சியுற்றுத் தொன்றுதொட்டு இன்று வரை சிறப்புற்று விளங்குவது பரதக்கலை ஆகும். வைதீக மதங்களான சைவத்தையும் வைணவத்தையும் அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியுற்ற பரதநாட்டியம் பண்டைய காலத்தில் கூத்து, சதிர் என்று அழைக்கப்பட்டுக் குருகுலப் பரம்பரையினரால் பேணிப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு, காலக்கிரமத்தில் சின்னமேளமென்று சாதாரண பாமர மக்களால் அழைக்கப்பட்டு தற்காலத்தில் பரதநாட்டியம் என்று பெயர் பெற்றது.

விஜயநகர, மராட்டிய மன்னர்களின் ஆட்சியின்போது ஆட்சி மொழியாகத் தெலுங்கு இருந்ததினால் அம்மொழியில் அமைக்கப்பட்ட கர்நாடக சங்கீதப் பாடல்களே பரதநாட்டியத்திற்கு அடித்தளமாக உயிர்நாடியாக விளங்கின. தமிழ் நாடு, ஆந்திர மாநிலப் பிரிவினைக்குப் பின் தமிழ்மொழி பாவனைகள் கூடியதனாலும் தெலுங்கு மொழிப் பாவனை குறைந்ததாலும் இக்கலை வடிவத்தினை இரசிப்போர் எண்ணிக்கை சற்று குறைந்த போதிலும் பின்னர் எழுந்த தமிழ் எழுச்சி இயக்கங்களினால் பரதநாட்டியமும் தமிழ் சாகித்திய கர்த்தாக்களின் தமிழ் சாகித்தியங்களையும் உள்வாங்கி இளைய தலைமுறையினர் நாடும் ஒரு உயிர்க்கலையாகத் திகழ்கின்றது.

பரதநாட்டிய சம்பிரதாய நடன நிகழ்ச்சிகளின் அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், கீர்த்தனை,



அஷ்டபதி, ஜவாளி, தில்லானா, விருத்தம் என்பவை இடம்பெறும். முன்பு ஒரு நடன நிகழ்வோ, அரங்கேற்றமோ அலாரிப்பில் ஆரம்பமாவதே வழக்கமாயிருந்தது. ஆனால் இன்று நடைமுறையில் அலாரிப்புக்கு முன்னதாகவோ அன்றி அலாரிப்பிற்கு பதிலாகவோ கணேசர் அஞ்சலி (ஸ்துதி) புஸ்பாஷ்பவி, குருபதாஞ்சலி போன்ற நாட்டிய அஞ்சலி நிகழ்வுகளையும் மல்லாரி, கவுத்துவம், தோடையமங்களம் போன்ற தெய்வீகம் சார் நாட்டியங்களையும் குலதெய்வ வழிபாட்டு நடன உருப்படிகளுக்கு நாட்டியம் அமைத்து ஆடும் வழக்கமும் சமீப காலத்தில் நாட்டியக் கலையுலகில் புகுத்தப்பட்ட உருப்படியாகும்.

கர்நாடக இசையில் அமைந்த பாடல்களுடன் மிருதங்கம், வயலின், புல்லாங்குழல், நட்டுவாங்கத் தாளத்தின் கணீர் ஒலியுடன் நட்டுவனாரின் நட்டுவாங்கத்துடன் ஒரு பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெறும்.

## அன்னையின் நினைவாக பிள்ளைகளின் அறப்பணி






அமரர் யுகபாலன் லோகநாயகி அவர்களின் 60வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது பிள்ளைகளால் மாணவன் ஒருவனுக்கு துவிச்சக்கர வண்டியும், வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரமும் துமி அமைப்பினூடாக வழங்கப்பட்டுள்ளது. அன்னையின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.



"மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று."

# இலங்கை கிரிக்கெட் அணியில் சாதிக்கும் தமிழ் வீரர்கள்

நம்முட்டி






வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை கிரிக்கெட் அணியொன்றில் மூன்று தமிழர்கள். இலங்கையின் 19 வயதுக்குட்பட்ட அணியின் ஆசியக் கிண்ணப் போட்டியில். சாருஜன் (St.Benedicts - Colombo ), நியூட்டன் (Central College - Jaffna ), மாதுளன் (St.John's College - Jaffna ) ஆகிய மூவருமே ஆடுகின்றனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஷார்ஜா கிரிக்கெட் விளையாட்டரங்கில் இன்று வெள்ளிக்கிழமை (29) நடைபெற்ற நேபாளத்திற்கு எதிரான 19 வயதுக்குட்பட்ட ஆசிய கிண்ண பி குழு கிரிக்கெட் போட்டியில் 55 ஓட்டங்களால் இலங்கை வெற்றிபெற்றது. சண்முகநாதன் ஷாருஜன், லக்வின் அபேசிங்க ஆகியோர் குவித்த அரைச் சதங்கள், ப்ரவீன் மனீஷ, ரஞ்சித்குமார் நியூட்டன், குகதாஸ் மாதுளன் ஆகியோரின் துல்லியமான பந்து வீச்சுக்கள் என்பன இலங்கையை இலகுவாக வெற்றபெறச் செய்தன.

அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை 50 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றது. கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் அணித் தலைவர் ஷாருஜன் மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 99 பந்துகளில் 62 ஓட்டங்களைப் பெற்றார். 3ஆவது விக்கெட்டில் விமத் தின்சாரவுடன்



41 ஓட்டங்களைப் பகிர்ந்த ஷாருஜன், 4ஆவது விக்கெட்டில் லக்வின் அபேசிங்கவுடன் மேலும் 79 ஓட்டங்களைப் பகிர்ந்தார். லக்வின் அபேசிங்க 50 ஓட்டங்களைப் பெற்றார். ஷாருஜன், லக்வின் ஆகியோரைவிட கவிஜ கமகே 37 ஓட்டங்களையும் துல்னித் சிகேரா 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

234 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நேபாளம் 46.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது.




துடுப்பாட்டத்தில் மயன் யாதவ் மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 90 பந்துகளில் 3 பவுண்டறிகள், 2 சிக்ஸ்களுடன் 62 ஓட்டங்களைப் பெற்றார். ஆறு துடுப்பாட்ட வீரர்கள் இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றபோதிலும் அவர்களால் 20 ஓட்டங்களை எட்ட முடியாமல் போனது. பந்துவீச்சில் ப்ரவீன் மனீஷ 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் யாழ். மத்திய கல்லூரி வீரர் ரஞ்சித்குமார்



நியூட்டன் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் யாழ். சென். ஜோன்ஸ் வீரர் குகதாஸ் மாதுளன் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் விஹாஸ் தெவ்மிக்க 51 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

அதே சமயம், 17 வயதுக்குட்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியில் இடம்பிடித்து மிகச் சிறப்பான பந்துவீச்சு பெறுதியை பதிவு செய்த யாழ்.ஹாட்லி கல்லூரியின்



மாணவன் விக்னேஸ்வரன் ஆகாஷ், பங்களாதேஷ் அணிக்கு எதிரான சர்வதேச ஒருநாள் போட்டியில், அறிமுகப்போட்டியிலேயே ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார். இலங்கை விஜயம் மேற்கொண்டு விளையாடி வரும் பங்களாதேஷ் 17 வயது அணிக்கு எதிரான முதலாவது சர்வதேச போட்டி காலி சர்வதேச மைதானத்தில் இடம் பெற்றது. மழை காரணமாக 42 ஓவர் குறைக்கப்பட்டு போட்டி இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 37.5 ஓவர்களில் 141 ஓட்டங்களை பெற்று சகல விக்கட்களையும் இழந்தது. இப் போட்டியில் யாழ். வீரர் விக்கினேஸ்வரன் ஆகாஷ் ஐந்து விக்கெட்களை வீழ்த்தி தனது திறமையை வெளிப்படுத்தினார்.






இவ்வாறு வெவ்வேறு வயது பிரிவுகளில் நான்கு இளம் தமிழ் வீரர்கள் சாதித்து இருப்பது பல செய்திகளை சொல்லாமல் சொல்கிறது. இது தமிழ் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கவென்ற கோட்டா அடிப்படையில் வழங்கப்பட்டதோ, நல்லெண்ண வெளிப்பாட்டில் வழங்கப்பட்ட வொன்றோ, மாற்றமோ அல்ல. கடந்த சில வருடங்களாகவே தம் கல்லூரி அணிகளுக்காக சிறப்பாக ஆடி, கிடைத்த வாய்ப்புக்களில் எல்லாம் தம்மை வெளிப்படுத்தி 19 வயதுக்குட்பட்ட இலங்கை அணியின் பதினொருவரில் மூவராக இடம்பிடித்துள்ளனர் இத்தம்பியர்.

**இவர்களின் ஒவ்வொரு ஆட்டமும் இனி வரும் ஒவ்வொரு தமிழ் பேசும் கிரிக்கெட் வீரர்களுக்கும் உத்வேகத்தைக் கொடுக்கவேண்டும்.**